## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரியின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, கல்லூரியின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பதவிநிலைக் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். பதவிநிலைக் கல்லூரியை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பதவிநிலைக் கல்லூரியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கல்லூரியின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக கல்லூரி தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய

வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வின் நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாகப் பார்க்குமிடத்து, கல்லூரியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது கல்லூரியின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க கல்லூரி செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| குறித்த நியமத்தின் பிரகாரம் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 க்கமைய முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான போதும், தொடர்ந்து பயன்படுத்தப்படும் ரூபா 77,022,102 கிரயமுடைய நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்படு காலம் மீளாய்வு செய்யப்பட்டமையால் அந்த நிலையான | 2018 செப்டம்பர் தொடக்கம் விலை மதிப்புத் திணைக்களத்தால் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு புதிய பெறுமதிகள் 2020 சனவரி தொடக்கம் அமுலாகுவதால் 2020 ஆண்டுக் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணம் என்பன முறையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களது கணக்கீட்டு மதிப்பீட்டு வித்தியாசம் 3 ஆம் இலக்க பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 க்கமைய பதவி நிலைக் கல்லூரியின் ஊழியர்களுக்கு பணிக்கொடைக்கென 2009 தொடக்கம் நடப்பாண்டு வரை ரூபா 5,996,988 நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | சேவை நீங்கிய ஊழியர்களுக்குப் பணிக்கொடை வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் கல்லூரியின் சம்பள மற்றும் படிகளுக்கான நிதியேற்பாட்டின் மூலம் பணம் வழங்கப்படவுள்ளது. தற்சமயம் பணிக்கொடைக்கு உரித்தான 8 சேவை நீங்கிய ஊழியர்கள் உள்ளனர். அவர்களுக்கான நலன்கள் துரிதமாகத் தீர்வு செய்யப்படும். | ஊழியர் பணிக்கொடை அதிகாரச் சட்டம் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்து பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான கொள்கை தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட வாகனங்களது மீள் பெறுமதி ரூபா 6,250,000 மற்றும் திரண்ட தேய்மானமாகிய ரூபா 1,250,000 என்பன சொத்துக்கள், பொறித் தொகுதிக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, திரட்டு நிதியம் ரூபா 500,000 தவறான மதிப்பீட்டுக் குள்ளாகியிருந்தது. அவ்வாறே, இராணுவத்திற்குச் சொந்தமான ரூபா 1,050,000 பெறுமதியான UHA7436 டாட்டா டிரக வண்டி 2018 மே 3 ஆந் திகதி இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் அப்பெறுமதி | 2019 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படாததால் ஆண்டிற்கான தேய்மானம் உள்ளடக்கப்படத் தேவையில்லை. ஆகவே, மீள் மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் திரண்ட தேய்மானத்திற்கு நிதிக்கூற்றுக்களில் நீக்கப்பட்டிருந்தது. UHA 7436 டாட்டா டிரக் வண்டி இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. முற்றாகத் தேய்மானத்திற் குள்ளாகிய தால் தேய்மானம் தேவையில்லை. தவறுதலாக சொத்து பதிவேட்டிலிருந்து நீக்கப்படாது உள்ளது. | சொத்துக்களைக் கணக்கிலிடும்போது அதன் உரித்தும் அது உள்ளமை குறித்தும் உறுதி செய்து கணக்கிலிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,940,105 பெறுமதியான எழுதுகருவி வகைப் பொருள் கையிருப்பு கணக்கிலிடப்படவில்லை. | எழுதுகருவி வகைப் பொருட்களது பெறுமதி 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கல் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கல்லூரியின் கையிருப்பு கணக்கிலிடப்பட வேண்டும். |
| (இ) | பதவி நிலைக் கல்லூரியின் ஊழியர்கள் பொருட்டு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,819,548 கணக்கிலிடப்படவில்லை. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பைப் பெற்று அதனைக் கொடுப்பனவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கல்லூரியின் நடவடிக்கைகளுக்கு ஏனைய அரச நிறுவனங்கள் வழங்கிய ரூபா 20,900,000 பெறுமதியான 12 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், இதுவரை உரித்து சுவீகரிக்கப்படாதிருந்தது. அதன் பொருட்டு 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,640,000 திரண்ட தேய்மான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்தை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை இராணுவத்திற்குச் செலுத்த வேண்டிய ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 10,992,853 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | கணக்குகளில் பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நெடுங்காலக் கடனைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பதவிநிலைக் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டினது அரச பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரி (திருத்தம்) அதிகாரச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு | சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்கு சிவில் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு கணக்காய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டுமாயினும், அநேக ஆண்டுகளாக இந்த இரண்டு பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. | சிவில் நிர்வாகம் மற்றும் உள்ளகக் கணக்காய்விற்கு நிரந்தர பதவிலான உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு அநேக சந்தர்ப்பங்களில் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சேவை அதிகாரச் சட்டம் | விலகிய 8 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடைக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. | எதிர்காலத்தில் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1980 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பங்களிப்புத் தொகை கொடுப்பனவு செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் பங்களிப்புத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 14,159,391 மிகை ஆகும். இதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,492,910 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 20,652,301 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் ரூபா 20,612,866 அதிகரித்தமை இந்த அவதானிப்புக்கான பிரதான காரணம் ஆகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களது போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டினது மொத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 20,612,866 அதிகரிப்பதற்கு மூல காரணம் மீளாய்வாண்டினது திறைசேரிப் பெறுவனவு 18 சதவீதமாகிய ரூபா 23,699,172 அதிகரிப்புக் காரணம் ஆகும். அவ்வாறே, கல்லூரியின் செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதமாகிய ரூபா 5,414,319 அதிகரிப்புக்குள்ளாகியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மீளாய்வாண்டின்போது கல்லூரி நடாத்திய கற்கை நெறிகளில் 160 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். அதில் 157 பேர் கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருந்தனர். அதற்கமைய, ஒரு உத்தியோகத்தரின் பொருட்டு ரூபா 1,421,495 வருடாந்தக் கிரயம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, முன்னைய ஆண்டின் போது 140 உத்தியோகத்தர்களில் 136 பேர் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்திருந்தனர். ஒரு உத்தியோகத்தரின் பொருட்டு ஏற்பட்ட கிரயம் ரூபா 1,641,280 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 உத்தியோகத்தர்கள் கூடுதலாகப் பங்குபற்றச் செய்து ஒரு உத்தியோகத்தரின் கிரயத்தை ரூபா 219,785 குறைத்துக் கொள்வதற்கு கல்லூரியில் இயன்றது.

### 3.1 பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டின் போது அலுமினியம் நுளம்பு வலைகளைப் பொருத்துதல், கூடாரப் பொருட்கள், தேகப் பயிற்சி போன்ற மூலதன சொத்துக்களை உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 3,947,772 மற்றும் விரிவுரைக் கட்டணம், இயந்திர சாதனங்களைப் பழுதுபார்த்தல் போன்ற மீண்டுவரும் செலவினங்களுக்கு ரூபா 15,881,354 கல்லூரித் தலைவரது கணக்கின் மூலம் செலவிடப்பட்டு | கல்லூரித் தலைவர் கணக்கின் மூலம் செலவு செய்து மீள் நிரப்பப்படும் அடிப்படையில் பொருட்கள் கொள்வனவு செய்ததானது மிகுந்த உயர் தன்மை வாய்ந்ததும் தரம் மிக்கதுமான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவே வியாபார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு குறைந்த விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குக் கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்கப்படுவதால் கல்லூரியின் சகர | பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்கு அமைவாக கல்லூரியின் பொருட் கொள்வனவை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்னர் மீள் வழங்கப்பட்டிருந்தது. | தரத்தினரதும் நலனோம்பலுக்காக கல்லூரி மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | |
| (ஆ) | பாவனையில் ஈடுபடுத்தப்படாது இருந்த இயந்திரமொன்றிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 229,000 பெறுமதியான 22 மாஸ்டர் ரோல்கள் மற்றும் 22 காட்ரிஜ் என்பன பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தன. | பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வம் அற்றதால் அப்புறப்படுத்தப்பட உள்ளது. அந்த இயந்திரத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட பாஸ்டர் ரேஸ் மற்றும் காட்ரிஜ் என்பன வேறொரு இயந்திரத்தில் பயன்படுத்தப்பட முடியாதபடியால் அப்புறப்படுத்தப்படும் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும். | பொருட் கொள்வனவு விதிக்கோவைப்படி விற்பனையின் பின்னரான சேவை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறே, தேவையைச் சரிவர உணர்ந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

## 3.2 பிற நிறுவனங்களது வளங்களை உபயோகித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டில் கல்லூரி சுவீகரித்த தேசிய இளைஞர் மன்றத்துக்குரிய ஹெய்யனதுடுவையில் உள்ள 11 ஏக்கர்கள் காணி மற்றும் கல்லூரியின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமான பஸ் வண்டி மற்றும் இலங்கை இராணுவத்திற்கு வழங்கிய 11 பிற வாகனங்கள் என்பன 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தன. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஹெய்யன்துடுவவத்தை மற்றும் பஸ் வண்டியை கல்லூரி சுவீகரிக்கும் நடவடிக்கை நடைபெறுகின்றது. இராணுவத்தின் அநேக வாகனங்கள் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்தனவாகும். அவற்றை அவ்வவ்போது இராணுவத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கல்லூரியின் காணியினது உரித்து உறுதி செய்யப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பின்வரும் பதவி நிலைக் கல்லூரியின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டிற்குத் தேவையான பேராசிரியர் பதவிகள், விரிவுரையாளர், பதவிகள், ஏனைய பதவிகள் என்பன உருவாக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டு இறுதி வரை கல்விசார் பதவியணியில் அந்த உயர் பதவிகளுக்கு நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்தின் நோக்கம் மனிதவள அபிவிருத்தி என்பதால் கற்கை நெறிகளது தரத்தைப் பாதுகாப்பதற்கு கல்விசார் பதவியணியினர் ஆட்சேர்க்கபடுவது அவசியமாகும். |